சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – செல்வி சு.அட்சயாஸ்ரீ, இளநிலை உதவியாளர், இணை ஆணையர் அலுவலகம், திருச்சி – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2-1) துறை

அரசாணை (4ப) எண்.02

நாள்: 13.05.2024.
குரோதி, சித்திரை-30
திருவள்ளுவராண்டு-2055

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செயல்முறை ந.க.எண்.60881/2021/பி3, நாள்.31.05.2022.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கடித ந.க.எண்.60881/2021/பி3, நாள்.30.04.2024.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சி, இணை ஆணையர் மண்டலத்தில் வழக்கு ஆய்வராகப் பணிபுரிந்த சு.அகிலா 01.05.2021 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினார் எனவும், இறந்த அரசு ஊழியரின் மகளான செல்வி சு.அட்சயாஸ்ரீ 17.06.2021 நாளிட்ட விண்ணப்பத்தின் மூலம் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரியிருந்தார் எனவும், தனியரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 2-இல் காணும் ஆணையரின் செயல்முறையில் இளநிலை உதவியாளராக, திருச்சி, இணை ஆணையர் அலுவலகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 10.06.2022 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார் எனவும், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயது தகுதி பெற்றிருந்தார் எனவும், தனியர் மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும்

தெரிவித்து, செல்வி சு.அட்சயாஸ்ரீ, இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 10.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, திருச்சி, இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் செல்வி சு.அட்சயாஸ்ரீ என்பவரின் பணியினை தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 10.06.2022 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு தனியரது பணி வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. மனித வள மேலாண்மைத்துறையின் கடித எண்.3248/அ2/2023-1, நாள்.07.09.2023-இன்படி, இந்நேர்வில் அத்துறையின் இசைவு பெற தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
✓செல்வி சு.அட்சயாஸ்ரீ, இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர் அலுவலகம், திருச்சி.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.
நகல்:-
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
13/5/24